Virtual Schools

March 2021

Toronto District School Board

**TDSBஇன் மெய்நிகர் இரண்டாம்நிலைப் பாடசாலைக் குடும்பத்தவர்களுக்கான செய்திமடல்**

மெய்நிகர் பாடசாலைச் செய்திமடலின் மார்ச் 2021 இதழுக்கு உங்களை வரவேற்கின்றோம். மெய்நிகர் பாடசாலையில் மட்டுமன்றி, TDSB பாடசாலைகள் அனைத்திலும் என்ன நடக்கிறது என்பது பற்றித் தெரிந்துகொள்ள உதவும் தகவல்கள் மற்றும் இற்றைப்படுத்தல்களைக் கொண்டிருக்கும் இந்த மாதாந்த வெளியீடு உங்களுக்குப் பயனுள்ளதாக இருக்குமென நாங்கள் நம்புகிறோம்.

உங்களுக்குத் தெரியும், கல்வி அமைச்சு மார்ச் விடுமுறையைத் தாமதப்படுத்தியுள்ளது, ஆதலால் ஏப்ரல் 12 முதல் 16 வரை வரவிருக்கும் விடுமுறையைத் தற்போது நாங்கள் ஆவலுடன் எதிர்பார்க்கிறோம். இந்த வருடம் அனைவருக்கும் பரபரப்பான மற்றும் சவாலான வருடமாக இருப்பதால், மாணவர்கள் மற்றும் குடும்பத்தவர்கள் அனைவரும் சற்று ஆறுதலாக இருப்பதற்கு இந்த நேரத்தைப் பயன்படுத்துவார்கள் என்று நாங்கள் எதிர்பார்க்கிறோம். மேலதிக தகவல்கள் மற்றும் இற்றைப்படுத்தல்களுக்குத் தயவுசெய்து பார்வையிடுங்கள்: www.tdsb.on.ca/virtualschool அத்துடன், பின்தொடருங்கள் Twitter @tdsbvs.

## COVID ஆரம்பத்தின் ஒருவருட நிறைவின்போது, மன ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வுக்கு ஆதரவளித்தல்

மார்ச் 11 இல் ஆரம்பமாகும் இந்த வாரம், எங்களின் வாழ்க்கையை முற்றாக மாற்றியிருக்கும் உலகளாவிய COVID-19 தொற்றுநோய்ப் பரம்பலின் ஒரு வருட நிறைவைக் குறிக்கின்றது. இந்த வருடம் ஒரு சவாலான ஆண்டாக இருந்திருக்கிறது, அதிகளவிலான நிச்சயமற்ற தன்மையையும் மிகப்பெரிய மாற்றங்களையும் நாங்கள் எதிர்கொண்டிருக்கிறோம். இந்தத் தொற்றுநோய்ப் பரவல் சமூக ஏற்றத்தாழ்வுகளை கோடிட்டுக்காட்டி அடக்குமுறைக்கு எதிரான விமர்சனரீதியான உரையாடல்களை ஆரம்பித்திருக்கிறது. தொற்றுநோய்ப் பரவல் ஏற்படுத்துகின்ற மன அழுத்தம் மற்றும் பிரச்சினைகளை நாங்கள் விளங்கிக்கொள்கின்ற அதேவேளையில், பலம், சமூக உருவாக்கம், எங்களின் விடாமுயற்சி ஆகியவற்றையும் எங்களால் இனம்காணமுடிகின்றது.

பாடசாலைக் கற்றல் எங்களின் பிள்ளைகளில் ஏற்படுத்தியிருந்த மாற்றங்கள் மற்றும் சவால்களை, ஈடுகொடுக்கும்தன்மை, இரக்கம், ஒருவருக்கொருவர் மற்றும் எங்களில் நாங்கள் செலுத்தும் அக்கறை போன்றவற்றின் உதவியுடன் நாங்கள் எவ்வாறு அந்த நேரத்தில் எதிட்கொண்டோம் என்பதைப் பற்றிச் சிந்திக்க வைக்கிறது.

[கல்வி அதிகாரி மற்றும் துணை அதிகாரிகளின் முழுமையான செய்தியை வாசியுங்கள்]..

## நினைவூட்டல்: மார்ச் விடுமுறை திகதிகளில் மாற்றம்

மார்ச் விடுமுறையை கல்வி அமைச்சு தாமதப்படுத்தியுள்ளது. இந்த விடுமுறை **ஏப்ரல் 12 – 16, 2021** ஆக இருக்கும்.

## மாணவரின் 3ம் காலாண்டு அடைவுகள் பற்றிய தொடர்பாடல்

3ம் காலாண்டில் முறைசார் இடைக்காலத் தேர்ச்சியறிக்கை வழங்கப்படமாட்டாது எனினும், தற்போதைய புள்ளிகளை வழங்குவதற்காக, மாணவர்களுடனும் குடும்பத்தவர்களுடனும் மார்ச் 22-26 வாரத்தில் ஆசிரியர்கள் தொடர்புகொண்டிருந்தனர்.

*முறைசார்* பெற்றோர்/ பாதுகாவலர்-ஆசிரியர் கலந்தாலோசனைகள் இருக்கமாட்டாது. எனினும், மாணவரின் முன்னேற்றத்தைப் பற்றிக் கலந்துரையாடுவதற்குப் பரஸ்பரம் வசதியான ஒரு நேரத்தை மார்ச் 29க்கும் ஏப்ரல் 1க்கும் இடையில் தெரிவுசெய்யும்படி பெற்றோர் / பாதுகாவலர்களை கேட்டுக்கொள்கிறோம். சந்திப்பை ஒழுங்கு செய்வதற்காக உங்களுடைய பிள்ளையின் ஆசிரியரை/ஆசிரியர்களைத் தயவுசெய்து மின்னஞ்சல் மூலம் தொடர்புகொள்ளுங்கள்.

## இயக்குநரின் வருடாந்த அறிக்கை

இயக்குநரின் வருடாந்த அறிக்கை 2020 கடந்த வருடம் TDSB பாடசாலைகள் அனைத்திலும் நிகழ்ந்த முக்கியமான விடயங்கள், Multi-Year Strategic Plan (பல வருடங்களுக்கான உத்தித் திட்டம்) இல் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் என்பவற்றைக் காட்டுகிறது.
[இணையத்தில் அறிக்கையை வாசியுங்கள். ].

## ரொறன்ரோ பொதுச் சுகாதாரப் பிரிவினரின் (TPH) தடுப்புமருந்து பற்றிய சமீபத்திய அறிவிப்பு

ரொறன்ரோ முழுவதும் தடுப்புமருந்துகள் கிடைக்கக்கூடியதாக இருப்பதால், அதுபற்றி மேலும் அறிவதற்குத் தயவுசெய்து [TPH வலைத்தளத்தைப் பார்வையிடுங்கள்.]

Virtual Schools

March 2021

## வெளிக்களக் கற்றலுக்கான புதிய வலைப்பக்கம்

பாதுகாப்பாக வெளியே செல்வது எப்போதும் இருந்ததைவிட, இப்போது மிகவும் முக்கியமானதாக இருக்கிறது. மாணவர்கள், குடும்பத்தவர்கள் மற்றும் பணியாளர்கள் வெளிப்புறத்திலிருந்து பாதுகாப்பான மற்றும் கல்விரீதியான வழியில் அதிக பயனைப் பெறுவதற்கு உதவுவதற்காக, புதிய வெளிக்களக் கற்றல் வலைத்தளத்தை TDSB அறிமுகப்படுத்தியுள்ளது. இந்தப் புதிய வலைத்தளத்தை இன்றே பாருங்கள்!

## ஒன்ராறியோ இரண்டாம்நிலை மாணவர் எழுத்தறிவுப் பரீட்சை (OSSLT) இற்றைப்படுத்தல்

இந்த வருடம், புதிய இணைய ஒன்ராறியோ இரண்டாம்நிலைப் பாடசாலை எழுத்தறிவுப் பரீட்சை சோதனை (OSSLT) ஒன்றை EQAO பரீட்சித்துப் பார்க்கிறது. இந்தக் களப் பரீட்சையில் பங்கேற்பது கட்டாயமில்லை & இதில் பங்கேற்பதில்லை என்று TDSB முடிவு செய்திருக்கின்றது. மேலும் அறிக.

## TDSB உரையாடல் தொடர்

நீங்கள் மேலும் அறிய விரும்புவதாக நாங்கள் கேள்விப்பட்ட தலைப்புகளில் நிகழும் நீங்கள் கலந்துகொள்ளக்கூடிய முறைசாரா தொடர்ச்சியான உரையாடல்களில் எங்களுடன் இணையும்படி குடும்பத்தவர்களை அழைக்கின்றோம். மிகச் சிறந்த நிபுணர்களின் பேச்சுக்களை இணையத்தில் செவிமடுங்கள் அத்துடன் கேள்வி, பதில் அமர்வுகளில் பங்குகொள்ளுங்கள்.

வரவிருக்கும் அமர்வுகள் தொடர்பான திகதிகள் மற்றும் விபரங்களை அறிவதற்கு அந்த வலைத்தளத்தைப் பார்வையிடுங்கள்.

## மனித உரிமைகள் வருடாந்த அறிக்கை

TDSB சமீபத்தில் மனித உரிமைகள் தொடர்பான அதன் வருடாந்த அறிக்கையை முதன் முதலாக வெளியிட்டிருந்தது. இந்த அறிக்கையை வாசிப்பதற்கு, ஒரு சம்பவம் பற்றிப் புகாரளிப்பதற்கு, கொள்கைகள் மற்றும் நடைமுறைகளை அணுகுவதற்கு மற்றும் Q&A வாசிப்பதற்கு, மனித உரிமைகள் வலைத்தளத்தைப் பார்வையிடுங்கள்.

## TDSB கிரேக்க மரபுத் திங்களைக் கொண்டாடுகின்றது

ரொறன்ரோ மாவட்ட கல்விச் சபையில், மார்ச் மாதம் கிரேக்க மரபுத் திங்களாக உள்ளது. கிரேக்க கனேடியர் கனடாவுக்கு செய்த பல சாதனைகளையும் பங்களிப்புகளையும் கொண்டாடுவதற்கான ஒரு தருணம் இதுவாகும், அத்துடன் கிரேக்க கலாசாரத்தின் வரலாற்றை அடையாளம் காண்பதற்கும் அது பற்றி அறிவதற்குமான ஒரு வாய்ப்பாகவும் இது உள்ளது. மேலும் அறிக.

இந்த வருடத்தின் கருப்பொருள்:

1821-2021

**சுதந்திரம் மற்றும் ஒற்றுமை– Ελευθερία και Ενότητα**

**எங்களின் வேர்களிலிருந்து கற்றல் … எங்களின் எதிர்காலத்தை வடிவமைத்தல்**

## வழிகாட்டல் (Guidance) குழுவினரின் செய்திகள்

**இரண்டாம்நிலைக்குப் பின்பான கற்கை பற்றிய நினைவூட்டல்கள்**

- OCAS அல்லது OUAC இலுள்ள கோப்பிலுள்ள கல்வி தொடர்பான தகவல்களைப் பரிசீலிப்பதற்காக, இணைய மூலமான விண்ணப்பத்தை, OCAS வலைத்தளத்தில் அல்லது OUAC வலைத்தளத்தில் கிரமமாகப் பார்வையிடும்படி ஒன்ராறியோ கல்லூரிகளுக்கு அல்லது பல்கலைக்கழகங்களுக்கு விண்ணப்பித்திருக்கும் மாணவர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள். மாற்றங்கள் தேவைப்பட்டால், மெய்நிகர் இரண்டாம்நிலைப் பாடசாலை OCAS/OUAC கணக்குத் தொடர்பான பிரச்சினைகளுக்கான Google Form ஐப் பயன்படுத்தி, VSS Guidance (வழிகாட்டல்) குழுவினரைத் தொடர்புகொள்ளும்படி மாணவர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்

- ஒன்ராறியோவிற்கு வெளியேயுள்ள ஒரு கல்லூரிக்கு அல்லது பல்கலைக்கழகத்திற்கு நீங்கள் விண்ணப்பித்திருப்பதுடன் உங்களின் விண்ணப்பம் தொடர்பாக உங்களுக்கு உதவி தேவைப்பட்டால், தயவுசெய்து உங்களின் பாடசாலை வழிகாட்டுதல் ஆலோசகருடன் தொடர்புகொள்ளுங்கள். ஒன்ராறியோவிற்கு வெளியே உள்ள கல்லூரிகள் அல்லது பல்கலைக்கழகங்கள் உங்களிடமிருந்து *Mident* இலக்கத்தைக் கோரக்கூடும், TDSB மெய்நிகர் பாடசாலைக்கான *Mident* இலக்கம் 936990 ஆகும்.

**தரம் 11 மற்றும் 12 மாணவர்களின் 3ம் காலாண்டு ப்பாடநெறிகள் பற்றிய முழுமையான வெளிப்படுத்தல்**

- **ஏப்ரல் 6, 2021 செவ்வாய்க்கிழமை,** VSS இல் தரம் 11 மற்றும் 12 பாடநெறிகளில் பதிவுசெய்த மாணவர்களின் 3ம் காலாண்டுக்கான புள்ளிகளை வெளிப்படுத்தும் திகதி என்பதை நினைவூட்டுகிறோம்.
- பதிவுசெய்திருந்த தரம் 11 அல்லது 12 பாடநெறிகளில் ஏதாவது ஒன்றிலிருந்து விலக விரும்புவதுடன், அவர் விலக விரும்பும் அந்தப் பாடநெறி அவரின் உத்தியோகபூர்வ எழுத்துப்படியில் (transcript) வரக்கூடாது என மாணவர் ஒருவர் விரும்பினால், ஏப்ரல் 6, 2021, செவ்வாய்க்கிழமை பி.ப. 3 மணிக்கு முன்பாக அதிலிருந்து அவர் விலகிவிட வேண்டும். தரம் 11 அல்லது 12 பாடநெறிகளில் பதிவுசெய்திருந்த மாணவர் ஒருவர், முழுமையாக வெளிப்படுத்தப்படும்

திகதிக்குப் பின்னர் ஏதாவது ஒரு பாடநெறியிலிருந்து விலகினால், அவரது உத்தியோகபூர்வ அவர் விலகிய திகதியில் அவருக்கு இருந்த புள்ளிகளுடனும் அதற்குப் பக்கத்தில் W (பின்வாங்கல்) என்ற அடையாளத்துடனும் அந்தப் பாடநெறி இருக்கும்.

- பாடநெறி ஒன்றிலிருந்து பின்வாங்குவதற்கு (விலகுவதற்கு), அவரின் OSR பாடசாலையின் (வழமையான பாடசாலை) வழிகாட்டுதல் ஆலோசகருடன் தொடர்புகொண்டு பாடநெறியிலிருந்து விலகுவதற்கான அனுமதியை மாணவர் கோரவேண்டும். மாணவர் 18 வயதிற்குட்பட்டவராக இருந்தால், அவரின் பெற்றோர்/பாதுகாவலர் OSR பாடசாலையின் (வழமையான பாடசாலை) வழிகாட்டுதல் வழிகாட்டல் ஆலோசகரைத் தொடர்புகொண்டு அதற்கான ஒப்புதலை அளிக்கவேண்டும்.

## மெய்நிகர் வகுப்புக்களில் VSS நிர்வாகிகள் இணைதல்

நேரில் கற்கும் வகுப்புக்களில் நிகழ்ந்ததைப் போலவே VSS நிர்வாகிகள் வகுப்புகளில் அடிக்கடி இணைகிறார்கள். பின்வரும் அனுபவத்தை ஒரு நிர்வாகி பகிர்ந்துகொண்டார்:

"எனது ஆசிரிய சகாக்களின் வகுப்பறைகளைப் பார்வையிடும் வாய்ப்பு எனக்குக் கிடைத்திருந்தது. ஹவாயில் எரிமலைச் செயல்பாடு, பாகிஸ்தானில் பூகம்பங்கள் மற்றும் காலநிலை மாற்றம் என்பவற்றுடன் தொடர்பாக chat இல் குறுஞ்செய்தி அனுப்புதல் முதல் நன்கு ஆய்வு செய்யப்பட்ட மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குழு விளக்கக்காட்சிகள் செய்தல் வரை மாணவர்கள் காட்டும் ஈடுபாட்டைப் பார்க்கும் பரந்த அனுபவங்கள் எனக்குக் கிடைத்திருந்தன.

மெய்நிகர் சூழலில் எதிர்கொள்ளப்பட்ட சவால்களை நான் கவனித்தேன், இருப்பினும், மாணவர்களுக்குத் தடையற்ற கற்றல் அனுபவங்களை வழங்குவதற்காக ஆசிரியர்கள் நிலைமைக்குத் தக்கதாக, தொழில்நுட்பத்தை நன்கு கையாண்டதைப் பார்த்தேன்.

## Mindfest

இரண்டாம்நிலை மற்றும் இரண்டாம்நிலைக்குப் பின்பான மாணவர்களின் மன ஆரோக்கியத்தை மேம்படுத்துவதற்காக ரொறன்ரோ பல்கலைக்கழகத்தின் உளவியல் துறை வருடாந்தம் ஒழுங்குசெய்யும் *Mindfest* (மார்ச் 8-12) எனப்படும் நிகழ்வில் கலந்துகொள்வதை Family Studies பிரிவு ஊக்குவித்திருந்தது. இந்த வருடம், தொற்றுநோய்ப் பரவலின்போது மன ஆரோக்கியத்தைப் பேணுவதிலுள்ள சவால்கள் போன்றவற்றில் கவனம்செலுத்தும் விடயங்களில் பட்டறைகள் முற்றிலும் இணையப் பட்டறைகளாக இருந்தன. Dr. Kenneth's Fung இன் பதிவுசெய்யப்பட்ட உரையை இங்கு பாருங்கள்: *தொற்றுநோய்ப் பரவல் காலத்தின்போது ஈடுகொடுக்கும் தன்மையையும் மகிழ்ச்சியையும் வளர்த்தெடுத்தல்*.

## Co-Op at VSS: நிஜ உலகம், இணையத்தில்

VSSஇல் தொழிலுடன் இணைந்த பாடசாலைக் கல்வியைப் பல்வேறு துறைகளில் மாணவர்கள் பெற்றுக்கொள்கின்றனர். தகவல்தொடர்புத் திறன்களைச் செம்மைப்படுத்துவதுடன் அவர்களின் சுயவிபரக் கோவைகளை (resumes) உருவாக்கும்போது உறவுகளை வளர்ப்பதற்கான நம்பிக்கையையும் திறன்களையும் மாணவர்கள் வளர்த்துவருகின்றனர். கருத்தில்கொள்ளப்படும் உற்சாகமான வேலைகளில் சில: ஆசிரிய உதவியாளர், சுகாதாரத் துறையில் எழுத்தர் உதவியாளர், பத்திரிகையியல், நிதிப் பகுப்பாய்வு, இலாப நோக்கற்ற பணி, உள்ளக வடிவமைப்பு, சுற்றுச்சூழல் அறிவியல், போக்குவரத்து, சட்ட அமுலாக்கம் மற்றும் கட்டுமானம் மற்றும் வடிவமைப்பு தொடர்பான ஆய்வு. மாணவர்கள் காட்டும் அர்ப்பணிப்பு மற்றும் உறுதிப்பாட்டில் மாணவர்களின் மேற்பார்வையாளர்கள் மிகுந்த திருப்தியடைந்திருப்பதாக ஆசிரியர்கள் தொடர்ந்து தெரிவிக்கின்றனர். பாராட்டுக்கள்!

Co-Op மாணவர்களுக்கான அனுபவ அமர்வுகளை மெய்நிகர் வழியில் வழங்குவதற்கு மிகவும் சவாலாக இருந்த பகுதிகளில் ஒன்றாக தொழில்துறை இருந்தது, ஆனால், போக்குவரத்து துறையில் ஆர்வமுள்ள மாணவர்களின் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கான, "Co-Op போக்குவரத்து அனுபவத்தை" உருவாக்குவதற்காக Co-op ஆசிரியர் ஒருவர் Auto ஆசிரியருடன் இணைந்து சற்று ஆக்கபூர்வமான வழியில் செயற்பட்டுள்ளார்.

Ontario Youth Apprenticeship Program (ஒன்ராறியோ இளைஞர் பயிற்சி திட்டம்), விசேடமான TDSB auto திட்டங்கள், Centennial College திட்டங்கள் மற்றும் ரொறன்ரோ நகர் Fleet Services (வாகனங்களின் கையாள்கை) உள்ளடங்கலான இடங்களிலிருந்து வாரா வாரம் பேச்சாளர்களை உள்ளடக்கி, போக்குவரத்துத் துறையிலான அனுபவத்தை இரண்டாவது காலாண்டில் அது விரிவுபடுத்தியிருந்தது. இந்தத் திட்டத்துக்கான மாணவர்கள் போக்குவரத்துடன் தொடர்பான பல்வேறு பின்புலங்களைக் கொண்டிருந்தனர், அத்துடன் அவற்றைப் பற்றி மேலும் அறிவதற்கு அவர்கள் தெரிவுசெய்திருந்த அலகுகள் மற்றும் தலைப்புகளில் அவர்கள் அனைவரும் ஈடுபட்டிருக்கின்றனர்.

யாவுமே மாறியிருக்கும் இந்த வருடத்தில், Co-Op கல்வியை இணைய உலகில் அணுகக்கூடியதாகவும், உற்சாகமானதாகவும் மாற்றுவதற்காக, இசைவாக்கப்பட்ட, மேம்படுத்தப்பட்ட, புதிய உத்திகளை மீளக் கற்பனை

செய்து மாணவர்களும் ஆசிரியர்களும் உருவாக்கியுள்ளனர், இது எதிர்காலத்தில் Co-Opஇல் ஈடுபடும் மாணவர்களுக்காகத் தொடரும்!

### DD பிரிவு *"March Fake"* ஐக் கொண்டாடுகிறது

"March Fake" என்று அழைக்கப்படும், பாடசாலையில் ஒருபோதுமே இருக்காத மார்ச் விடுமுறை, pyjama நாள், jersey நாள், St. Paddy நாள் கொண்டாட்டம், வினோதமான தொப்பி நாள், beach (கடற்கரை) நாள் மற்றும் வெள்ளிக்கிழமை dance party *ஆகியவற்றை உள்ளடக்கியிருந்தது. காலை வாழ்த்துக்கூறும் மூன்று குழுக்களிடையே நடனமாடல் போட்டியை இந்தப் பிரிவு வைத்திருந்தது, மாணவர்கள் அதிக ஈடுபாட்டுடன் பங்குபற்றியதுடன் மிகுந்த சந்தோஷமாக இருந்தனர்!

### Hospitality goes to Duck Cooking School

எங்களின் VSS culinary program (உணவு தயாரிப்பு)இன் ஒரு பகுதியாக, மெய்நிகர் வழியிலான களப் பயணங்களை ஆசிரியர் Michael Varty ஒழுங்குசெய்திருந்தார். மார்ச் 19 அன்று, Stouffville இல் உள்ள King Cole Ducks இன், Chris Conzellmann உடன் வாத்து ஒன்றைச் சமைக்கும் மெய்நிகர் வழிச் செய்முறையில் hospitality மாணவர்கள் கலந்துகொண்டனர் ஆர்வமூட்டும் இந்த விளக்கக்காட்சியின் நோக்கம் உள்ளூர்ரீதியான, நெறிமுறைக்குட்பட்ட நிலையாகச் செய்யக்கூடிய வேளாண்மை ஆக இருந்தது. Hospitalityஇன் இணைய வடிவம், சமையலறை அமைப்பில் வெற்றிபெறப் பெரும்பாலும் கடினமாக இருக்கும் பாடநெறியின் கோட்பாடுசார்ந்த எதிர்பார்ப்புகளை அடைவதற்கான சிறந்ததொரு சூழலாக இருந்தது.

மெய்நிகர் வழியில் வழிகாட்டப்படும் இந்தச் சுற்றுப்பயணங்களின் ஊடாக, இயக்கரீதியான மற்றும் ஊடாட்டமுள்ள செயல்பாடுகளில் மாணவர்கள் ஈடுபடுகின்றனர். தொழில்ரீதியான பங்காளர்களுடனான உரையாடல்களுடன் சமையலறையில் இருந்து சமையல்காரர் இணையத்தில் சமையல் செய்துகாட்டுவதன் மூலம், மெய்நிகர் சூழலில் நிஜ வாழ்க்கை அனுபவங்களை மாணவர்கள் பெற்றுக்கொள்கின்றனர்.

### *உணவைப் பற்றிப் பேசும்போது …*

மாணவர்கள் வீட்டில் இருக்கலாம், ஆனாலும் food labs (உணவு ஆய்வகங்கள்) இல் அவர்களுக்கு அனுபவங்கள் கிடைக்கின்றன! வெவ்வேறு வழிகளில் அவர்கள் முயற்சித்தாலும், பாதுகாப்புக்கு எப்போதும் முன்னுரிமை கொடுக்கப்படுகிறது, Family Studies Foods programs (HFN, HFC மற்றும் HFA) இல் இப்போதும் சமையலை அவர்கள் பயிற்சிசெய்ய முடிகிறது. Vegan சிற்றுண்டி, பீசா, சர்வதேச உணவுகள் என அனைத்தும் வருடம் முழுவதும் முயற்சிக்கப்பட்டுள்ளது. ஆரோக்கியமான, வீட்டு உணவு தயாரித்தல் மற்றும் போஷாக்கான உணவு உண்ணலை ஊக்குவிக்கும் எங்களின் மகத்தான குறிக்கோளுடன் மாணவர்கள் என்ன தயாரிக்கின்றார்கள் என்பதில் நிறைய நெகிழ்வுத்தன்மை உள்ளது!

### விசேட கல்விப் பிரிவின் திட்டங்கள் முன்நோக்கிச் செல்கின்றன

VSS விசேட கல்விப் பிரிவு தனித்துவமான கற்றல் தேவைகளைக் கொண்ட மற்றும் coding (குறியீட்டு முறை), podcasting, visual arts, நடனம் மற்றும் சங்கீதம் உள்ளடங்கலான பல்வேறு திறமைகளைக் கொண்டுள்ள மாணவர்களை ஆதரிப்பதில் ஆர்வமாக உள்ளது.

மாணவர்களின் ஆரோக்கியம், சமத்துவம், தனக்கான பரிந்துபேசல், நிலைமாற்றங்கள் ஆகியவற்றில் இந்தப் பிரிவு தற்போது கவனம் செலுத்துகிறது, அத்துடன் 11 மற்றும் 12ம் தர மாணவர்களுக்கு, இரண்டாம்நிலைக்குப் பின்பான பாதைகளைப் பற்றிய அமர்வுகளை வழங்குவதற்கும் அவை முயற்சிக்கின்றன. கற்றல்ரீதியான வலுவிழப்புகள், Autism Spectrum மற்றும்/அல்லது உடல்ரீதியான வலுவிழப்புகள் உள்ள மாணவர்களுக்குக் கிடைக்கும் ஆதரவுகள் மற்றும் அனுசரணைகள் பற்றி Sheridan College மற்றும் யோர்க் பல்கலைக்கழகத்தின் பிரதிநிதிகள் பேசவுள்ளனர்.

மாணவர்களின் வெற்றியை ஆதரிப்பதில் விசேட கல்வி ஆசிரியர்கள் உறுதியுடன் உள்ளனர்! கற்றல்ரீதியான உத்திகள் பற்றிய வகுப்புகள் மாணவர்களின் கற்றலைக் ஊக்குவிப்பதற்குத் தொடர்ச்சியாக, ஆக்கபூர்வமான வழிகளை வழங்குகின்றன. எங்களின் மாணவர்களில் பெரும்பாலானோர் செப்ரெம்பர் மாதத்தில் மீண்டும் நேரில் கற்கும் பாடசாலைக்கு நிலைமாறுவார்கள் என்பதை நினைவில் கொள்ளவேண்டும், மாணவர்களின் சுயமதிப்பு மற்றும் தனக்காகப் பரிந்துரைக்கும் திறன்களை நாங்கள் திட்டமிட்டு உருவாக்குகிறோம். அறிவே ஆற்றல்!

VSS இல் கற்றவர்களின் கல்வியில் பங்காளிகளாக சிறந்ததைச் செய்வதற்கு நாங்கள் தொடர்ந்து ஊக்குவிக்கிறோம்.

### VSS Debate & Public Speaking Club

ஒக்ரோபர் 2020 முதல், மாணவர்களை ஈடுபடுத்துவதும், முடங்கியிருத்தல் ஆரம்பமான நேரம் முதல் இந்த நேரம் தொடர்பான மாணவர்களின் கருத்துக்களை வழங்குவதற்கு உதவுவதும் ஒரு கனவாக இருந்தது. VSS அறிவுறுத்தல்கள் ஊடாக, ஆசிரியர்களின் வாய்மொழி மூலமான விளம்பரமாக, Debate & Public Speaking Club ஒன்றை உருவாக்குவது இலக்காக இருந்தது, 180 மாணவர்களுடன் club தொடங்கப்பட்டது! பல அர்ப்பணிப்புமிக்க ஆசிரியர்களும் முன்வந்தனர், 300 ஆர்வமுள்ள மாணவர்களைக் கொண்டதாக club வளர்ந்துள்ளது!

பல பாணிகளிலான சுய வெளிப்பாட்டுக்கான வாய்ப்பை club வழங்குகிறது. நாங்கள் club இல் முதல் வழங்கிய சந்தர்ப்பம் பிரிட்டிஷ் பாராளுமன்ற / கனேடிய நாடாளுமன்ற விவாதம் மற்றும் மாதிரி ஐக்கிய நாடுகள் விவாதமாக இருந்தது. ஒக்ரோபர் முதல், நாங்கள் மூன்று மாதிரி ஐ.நா. கருத்தரங்குகளையும் இரண்டு பிரிட்டிஷ் பாராளுமன்ற விவாதப் போட்டிகளையும் நடத்தியிருக்கிறோம். Scarborough U of T மாதிரி ஐக்கிய நாடுகள் கருத்தரங்கில் (SMC) எங்களின் TDSB VSS மாதிரி ஐ.நா மாணவர்கள் சமீபத்தில் நான்கு (!) விருதுகளை வென்றிருக்கின்றனர். இந்தக் clubஇன் பிரிட்டிஷ் பாராளுமன்ற விவாதப் பங்கேற்பாளர்கள் Halifax Warriors Cupக்குப் போட்டியிட்டனர், அங்கு நாங்கள் பத்து அணிகளாகப் போட்டியிட்டோம்! எங்களின் ஆசிரிய ஆலோசகக் குழுவினர் மற்றும் U of T மற்றும் Queen's University Debate Unionகளின் வெளிப்புற வழிகாட்டிகளுடன் பல பட்டறைகள் மற்றும் கருத்தரங்குகளையும் நடத்துகிறோம். மாணவர்கள் பங்குபற்றலுடன் நின்றுவிடவில்லை, *சிறப்பாகச் செய்கிறார்கள்*!

எங்களின் club யாப்பு மற்றும் சமத்துவக் கொள்கையை உருவாக்குவதற்கும் Public Speakingஐ விரிவுபடுத்தி மூன்று புதிய வகையான public speakingஐ வழங்குவதற்காகவும் பெரியதொரு பணிச்சுமையையும் பொறுப்பையும் சுமக்கும் பல மாணவ தலைவர்களை இந்தக் club தெரிந்தெடுத்துள்ளது: Toastmasters, the Munk Debates, மற்றும் Spoken Word.

ஆசிரிய ஆலோசகர்களின் எதிர்வினைகள்:

*"பாடசாலையில் நேரில் கற்றல் மீளவும் ஆரம்பமாகும்போது, debate ஆசிரிய ஆலோசகர்கள் இல்லாத பாடசாலைகளுக்கு இந்த club உதவிசெய்ய முடியும் என்று நாங்கள் நம்புகிறோம். ஒருவேளை இது ஏதோவொரு பெரிய விஷயத்தின் தொடக்கமாக இருக்கலாம்!"*
– Mark Woo

*"Debateஇல் மாணவர்கள் காட்டும் ஆர்வமும் உற்சாகமும் ஒவ்வொரு வாரமும் மெய்நிகர் பாடசாலையை மிகச் சிறந்த இடமாக மாற்றுகிறது. ஒவ்வொரு போட்டியிலும் அவர்களின் வாதங்களைக் கேட்பது, அவர்களின் வளர்ச்சியைப் பார்ப்பது எங்களின் மாணவர்கள் ஆக்கபூர்வமானவர்கள் மற்றும் ஆழமான அறிவுள்ளவர்கள், நகைச்சுவையான மற்றும் மிகவும் ஈடுகொடுக்கும் தன்மைமிக்கவர்கள் என்பதை ஞாபகப்படுத்துகிறது."*
- Debbie Lerech

## Reaching for the Top Club

இந்த வருடம் தனது Reach for the Top Clubஐ மெய்நிகர் பாடசாலை நடத்தியிருந்தது.

Reach for the Top தொடர்பான நீண்ட வரலாறு கனடாவுக்கு உண்டு. 1961 இல், பிரிட்டிஷ் கொலம்பியாவின் CBC இணை நிறுவனம் இந்தத் திட்டத்தை உருவாக்கியது, இது UKஇன் *Top of the Form* நிகழ்ச்சியை அடிப்படையாகக் கொண்டது. CBC இந்த நிகழ்ச்சியை நடத்தியது, அது பிரபலமடைந்தது. Alex Trebek சில வருடங்கள் இதனை ரொறோன்ராவில் தொகுத்து வழங்கினார். மேல்நிலைப் பாடசாலை அணிகள் சவாலான கேள்விகளுக்கு பதிலளிப்பதை நாடு முழுவதும் உள்ள குடும்பத்தவர்கள் வாரந்தோறும் பார்த்தனர். அதிக புள்ளிகள் பெற்ற அணி வெற்றியடைகிறது.

ஜனவரி மாதத்தில் RFTT குழுவை உருவாக்கிய 200 மாணவர்களுக்கும் எட்டுப் பணியாளர்களுக்கும், VSS Reach for the Top (RFTT) Club சிறந்ததொரு அனுபவமாக உள்ளது. Staff sponsor Mr.Goldberg அனைத்து தர மட்ட மாணவர்களையும் 32 அணிகளாகப் பிரித்துள்ளார் - 16 சிரேஷ்ட மற்றும் 16 இடைநிலை அணிகள். பின்னர் இந்த அணியினர் *Reach for the Top* வரலாற்றில் இல்லாத மிகப் பெரிய பாடசாலைசார் round-robin tournamentஐ நிறைவு செய்தனர் - மொத்தம் 104 games, வாரத்திற்கு 15 games.

மார்ச் நடுப்பகுதியில் playoffs அனைத்தும் முடிந்துவிட்டன, உரைகள், மெய்நிகர் விருதுகள் மற்றும் ஒரு ஆசிரியரால் தயாரிக்கப்பட்ட trivia *Kahoot* ஆகியவற்றுடன் நிறைவு விழா நிறைவடையும்! இந்த யோசனையைக் கூறிய மாணவர் பங்கேற்பாளர் இந்த நிகழ்வில் பேசவிருக்கிறார்.